**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவிடைமருதூர்**

முன்னிலை: **திரு. A.அப்துல்ரஹ்மான், B.Com., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

2026 ம் ஆண்டு திங்கள் ஜுன் 08 ம் நாள் திங்கள் கிழமை,

முன்னுரை பதிவேட்டு வழக்கு எண்.28/2025

-----------

அரசுக்காக,

காவல் ஆய்வாளர்,

திருநீலக்குடி காவல் நிலையம்,

குற்ற எண். 629/2023. ...குற்றமுறையிடுபவர்

..எதிர்..

**1. மூர்த்தி, வயது 22/2023,**

**த/பெ. ராஜா,**

**ரயிலடி தெரு, வேளங்குடி,**

**திருவாரூர் மாவட்டம்**

**(1 வது எதிரியை பொறுத்து முன்னுரை பதிவேட்டு**

**வழக்கு எண்.11/2026 என தனியாக பிரித்தெடுக்கப்பட்டு**

**நிலுவையில் உள்ளது.)**

2. ராகுல் (எ) ராஜசேகர், வயது 27/2023,

த/பெ. மனோகரன்,

சந்திரன் தெரு, 69 சாத்தனூர்,

திருவிடைமருதூர் தாலுக்கா. ....எதிரிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் 02/07/2025 அன்று முன்னுரை பதிவேட்டு வழக்கு எண்.28/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இவ்வழக்கில் 1 வது எதிரி மூர்த்தி, 2 வது எதிரி ராகுல் (எ) ராஜசேகர் ஆகியோரில், 1 வது எதிரி மூர்த்தி என்பவர் நீண்ட நாட்களாக

நீதிமன்றத்தில் ஆஜராகாததால் பிடி கட்டளை பிறப்பிக்கப்பட்டு, அவருக்கு எதிரான வழக்கு முன்னுரை பதிவேட்டு வழக்கு எண்.11/2026 என தனியே பிரிக்கப்பட்டு, 1வது எதிரி மூர்த்தி என்பவரை பொறுத்து முன்னுரை பதிவேட்டு வழக்கு எண்.11/2026 வழக்கானது நிலுவையில் இருந்து வருகிறது. குற்றமுறையிடுபவர் தரப்பில், கற்றறிந்த அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-I **திரு.I.பாண்டியராஜன்,**B.SC.,B.L.,MBA., அவர்களும் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.J.மணிகண்டன்**,B.com.,B.L., அவர்கள் ஆஜராகியும், ஆவணங்கள் பரிசீலனைக்குப் பின்னர், இன்று இந்நீதிமன்றத்தால் அவையறிய பிறப்பிக்கப்படும்....

## <u>உத்தரவு</u>

கடந்த 27/09/2023ம் தேதி மதியம் 03.00 மணிக்கு திருநீலக்குடி, திருநாகேஸ்வரம் கடைத்தெருவில், 1 மற்றும் 2 எதிரிகள் கையில் நீண்ட பட்டா கத்தியை வைத்துக் கொண்டு திருநாகேஸ்வரம் கடைத்தெருவில் "நாங்கள் இருவரும் பெரிய ரவுடிடா எந்த குச்சிகாரி, தேவடியா மகனுக்காவது தில்லு இருந்தா எங்ககிட்ட வந்து பாருங்கடா" என்று கையில் வைத்திருந்த பட்டாகத்தியை சுழட்டியும், மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு செய்து பொதுமக்களுக்கு அச்சம் பீதியை ஏற்படுத்தியும் குற்றம் செயலில் ஈடுபட்டு கொண்டிருந்தவர்களை பொது மக்கள் உதவியுடன் காவலர்களுடன் பிடிக்க முயன்ற போது எங்கக்கிட்ட வச்சிக்கிட்டா உங்களை வெட்டி கொலை செய்து விடுவோம் என கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 506(ii) IPC r/w 25(1A), 25(1C) Arms Act-ன் கீழ் திருநீலக்குடி காவல் ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும், அரசு தரப்பில் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும், பிரிவு 230BNSS-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3) இவ்வழக்கின் எதிரி மீதான பிரிவுகள் 25(1A), 25(1C) Arms Act-ன் கீழான குற்றச்சாட்டானது மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத் தக்கது என்பதால், இவ்வழக்கை உரிய விசாரணைக்காக மாண்புமிகு தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு பிரிவு 232(அ) BNSS-ன் கீழ் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

4) இவ்வழக்கின் எதிரி 27/09/2023 ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு, மதுரை கிளை சென்னை உயர்நீதிமன்ற குற்றவியல் பல்வகை மனு எண்.18192/2023-ல் 11/10/2023-ம் தேதியிட்ட உத்தரவின் படி 12/10/2023 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார். வழக்கு விசாரணையின் போதும், வழக்கு முடிவடையும் வரையிலும் எதிரி தொடர்ந்து பிணையில் இருந்து வர பிரிவு 232(ஆ) BNSS-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

5) இவ்வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை மாண்பமை தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சமர்பிக்க பிரிவு 232(இ) BNSS-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

6) அரசு குற்றத்துறை வழக்கறிஞருக்கு இவ்வழக்கு மேல்விசாரணைக்காக அனுப்பப்பட்டதென்று பிரிவு 232(ஈ) BNSS-ன் கீழ் தகவல் தெரிவிக்க உத்தரவிடப்பட்டது.

7) எதிரி வழக்கறிஞர் வைத்துக்கொள்ள வசதி உண்டு என்று கூறியுள்ளார்.

8) எதிரி 03/07/2026-ம் தேதியன்று மாண்பமை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூரில் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

சுருக்கெழுத்து தட்டச்சரிடம் என்னால் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 08 -ம் நாள் திங்கள் கிழமை அவையறிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஒப்பம் (A.அப்துல்ரஹ்மான்)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
திருவிடைமருதூர்.